**எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் ரீபீ நிலைமாற்றல் நிதியிடல் பொறிமுறை கூறின் 2015**

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய (ஜீஎவ்ஏரீஎம்) செயற்திட்டத்தின் ரீபீ நிலைமாற்றல் நிதியிடல் பொறிமுறை (ரீஎவ்எம்) கூறின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் இடையே 2013 யூன் 19 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட எஸ்ஆர்எல்--607-ஜீ07--ரீ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் சீ(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் படி, முன்னாள் சுகாதார அமைச்சும் தற்போதைய சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் அமுலாக்கல்களுக்கு பொறுப்பாக உள்ளது. சேவையாற்றிய பகுதிகளின் கீழுள்ள நடவடிக்கை எல்லைகளை அதிகரித்தல் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனியார் துறையுடன் மேம்படுத்தல் ஊடாக நேரடியாக அவதானிக்கப்பட்ட சிகிச்சை குறுகிய கால பாடநெறியின் (டிஓரிஎஸ்) வினைத்திறனை முன்னேற்றுவதன் மூலம் இலங்கையில் காசநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். சுற்று 06 இற்கான காசநோய் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கான செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ஐ.அ.டொலர் 9,589,491 ஆனதுடன் முழுத் தொகையும் ஜீஎவ்ஏரீஎம் ஆல் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2008 சனவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்.

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 04 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 04 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏனைய பதிவேடுகளிலுள்ள தகவல்களுடன் இணங்கியிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3 நிதிக்கூற்றுக்கள்

### 3.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ஐ.அ.டொலர் 562,082 க்கு சமமான ரூபா. 76,453,217 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 934,037,083 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| **வகுதி** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | | | | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|---|---|
| | **2015** | | **2014** | | |
| | **ஐ.அ. டொலர்** | **ரூபா** | **ஐ.அ. டொலர்** | **ரூபா** | **ரூபா** |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 5,545 | 798,791 | 52,256 | 6,848,109 | 148,903,993 |
| காசநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 556,537 | 75,654,426 | 843,545 | 110,133,241 | 785,133,090 |
| | 562,082 | 76,453,217 | 895,801 | 116,981,350 | 934,037,083 |

### 3.2 காசுப் பாய்ச்சல் கூற்று

முன்னைய ஆண்டிற்கான மற்றும் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் படி காசுப் பாய்ச்சல் கூற்றின் நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | **2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | | **2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | **ஐ.அ.டொலர்** | **ரூபா** | **ஐ.அ. டொலர்** | **ரூபா** |
| வெளிநாட்டு உதவி- மானியத்திலிருந்து பெற்ற காசு | 389,884 | 53,000,000 | 689,338 | 90,000,000 |
| உள்நாட்டு நிதியத்திலிருந்து பெற்ற காசு | 42,492 | 5,776,203 | 22, 978 | 3,000,000 |
| கேள்வி வருமானம் | - | - | 230 | 30,000 |
| சீராக்கங்களிற்காக: வெளிநாட்டு நாயணமாற்று நட்டம் | 7,002 | - | (698) | - |
| நிகழ்ச்சித்திட்ட செலவினங்களிற்காக செலுத்தப்பட்ட காசு | (556,537) | (75,654,426) | (525,776) | (68,645,183) |
| சீராக்கங்கள் | | | | |
| ஆண்டிற்கான மிகை / (பற்றாக்குறை) | (117,159) | (16,878,223) | 186,072 | 24,384,817 |
| வெளிநாட்டு நாயணமாற்று நட்டம்/ இலாபம் | 3,406 | 490,707 | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு | 7, 905 | 1,138,829 | 92 | 11,997 |
| பெறுமானத்தேய்வு | 121,389 | 17,487,476 | - | - |
| பணிக்கொடை | 8,459 | 1,218,656 | - | - |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு** | **24,000** | **3,457,445** | **186,164** | **24,396,814** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | |
| நிலையான சொத்துக்கள் | (5,545) | (798,791) | (52,256) | (6,848,109) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய காசு** | **(5,545)** | **(798,791)** | **(52,256)** | **(6,848,109)** |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| அமைச்சுக்கு (திறைசேரி) மீளளிக்கப்பட்ட காசு | (18,455) | (2,658,654) | (133,908) | (17,548,705) |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(18,455)** | **(2,658,654)** | **(133,908)** | **(17,548,705)** |
| காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு / தேறிய குறைவு | Nil | Nil | Nil | Nil |

## 4. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 4.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் 51 ஊழியர்களுக்கு செலுத்தவேண்டிய ரூபா 8.01 மில்லியன் தொகையான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான தொழிலாளர்களின் பங்களிப்புக்கள் கணக்கிற்கு எடுப்பதற்கு பதிலாக நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது.

### 4.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 371 (2)(ஆ) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371 (2)(உ) | பெறப்பட்ட முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கங்கள் பூர்த்தியடைந்த பின்னர் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 23 சந்தர்ப்பங்களில் ரூபா 874,125 தொகையான முற்பணங்கள் 1 முதல் 10 மாதங்கள் வரையான காலவீச்சில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 756 | ஐ.அ.டொலர் 97,137 இற்குச் சமனான ரூபா 13,993,811 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பில் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பௌதீக மெய்மையாய்வு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் மற்றும் தொடர்புபட்ட மென்பொருட்களிற்கான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பந்தி இல:4.3.2 | விதவைகள்/தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களித்த அலுவலர்கள் சார்பாக செயற்திட்டத்தால் 2015 ஜனவரி 31 இல் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 64,925 தொகை அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) கொள்வனவு வழிகாட்டி 2006- பந்தி 5.4.11 | பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவுகளின் விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளருக்கு அடுத்துவரும் மாதத்தின் 15 ம் நாளில் அல்லது அதற்கு முன்னர் அறிவிக்கப்பட வேண்டும். எனினும், 61 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 3.09 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவுகளின் விபரங்கள் அவ்வாறு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | உலகளாவிய நிதியத்தின் உசாத்துணை விதியின் 3 (iv) ஆம் இலக்கம் | 05 சந்தர்ப்பங்களில் எரிபொருளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய ரூபா 223,966 தொகையான உறுதிச்சீட்டுக்களுடன் மூல ஆவணங்களிற்கு பதிலாக ஆதார ஆவணங்களின் நிழற்படப்பிரதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

## 5. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 5.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட நிதிகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையின் படி நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு | ஆண்டின் போது பெறப்பட்ட நிதிகள் | | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2015 ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜீஎவ்ஏரீஎம் | 9.59 | 1,154.29 | 0.93 | 0.88 | 53.00 | 0.91 | 123.75 | 9.01 | 1,069.28 |
| | 9.59 | 1,154.29 | 0.93 | 0.88 | 58.00 | 0.91 | 123.75 | 9.01 | 1,069.28 |

### 5.2 பௌதீக முன்னேற்றம்

**காச நோயாளர்களை கண்டறிதல் மற்றும் சிகிச்சையளித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம், காசநோய் விடயங்களை கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் மீது 06 மாவட்டங்களில் மந்தமான முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும், காசநோய் விடயங்களை கண்டறிதல் தொடர்பான செயலாற்றலை முன்னேற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை மீதான சான்றுகள் பெறப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பண்பாளரினால் அளிக்கப்பட்ட விளக்கத்தின் பிரகாரம், மந்தமான செயலாற்றலிற்கான காரணங்கள்

ஒழுங்காக மதிப்பிடப்பட்டதுடன் சாத்தியமான தலையீடுகள் மாகாண சுகாதார சபைகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(ஆ மார்பக சிகிச்சைப்பிரிவில் பேணப்பட்ட சிகிச்சை பெற தவறியவர்களை கண்டுபிடிப்பதற்கான பதிவேடுகளின் பிரகாரம், காசநோயிற்கான மருத்துவ சிகிச்சைகளை தொடராத நோயாளர்களின் உயர் சதவீதங்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கொழும்பு, கம்பஹா மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ளதென அறிக்கையிடப்பட்டிருந்தது. சிகிச்சை பெற தவறுகின்றவர்களில் அதிக சதவீதமானவை காச நோய் பரவுவதற்கு சாதகமாகவும் சிகிச்சை பெற தவறிய நோயாளிகளை அவ் நோயிலிருந்து விடுவிப்பது மிகவும் தொலை வானது எனவும் குறிப்பிடுகின்றன. எனினும், மாகாண சுகாதார அலுவலர்களிற்கான பரீட்சிப்புக்களின் அளவை அதிகரித்தல் மற்றும் பயிற்சிகளை வழங்குதலினூடாக சிகிச்சை பெற தவறியவர்களின் வீதங்களை குறைப்பதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என செயற்திட்டப் பணிப்பாளர் விளக்கியிருந்தார்.

### 5.2.2 நுண்ணோக்கியல் சேவைகள்

செயற்திட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்ட 185 நுண்ணோக்கியல் நிலையங்களில் 25 நுண்ணோக்கியல் நிலையங்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. தொழில்நுட்ப பதவியணியினர் இல்லாமையால் பாதுக்க, ஹம்பாந்தோட்டை, மன்னார் மற்றும் முருகனிலுள்ள நுண்ணோக்கியல் நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. செயற்திட்ட பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட விளக்கத்தின் பிரகாரம், நோய் விடயங்கள் குறைந்தளவில் கண்டறியப்பட்டமை மற்றும் பதவியணியினரின் பற்றாக்குறை மற்றும் ஏனைய நிலையங்களுடனான இணைப்பு நிறுத்தப்பட்டமை காரணமாக பல நுண்ணோக்கியல் நிலையங்கள் மூடப்பட்டிருந்தது. அதிக வேலைச் சுமையுடன் உபகரணங்கள் மற்றும் ஏனைய வளங்கள் நிலையங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

## 6. பயனற்ற/ குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது ரூபா 1.33 மில்லியன் கிரயத்தில் 06 அரை தானியக்க உயிரியல் இரசாயனவியல் பகுப்பாய்விகளை கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருந்ததுடன் 2014 திசெம்பர் 08 இல் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்ய உடன்பட்டிருந்த போதிலும் அதில் 04 பிரிவுகள் மாத்திரமே 2015 பெப்ரவரி 11 இல் விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும், காலி மற்றும் புத்தளத்திலுள்ள மார்பக சிகிச்சைப் பிரிவுகளில் நிறுவப்பட்ட பகுப்பாய்விகள் தேவையான இரசாயனங்கள் இல்லாமையால் 01 வருடத்திற்கு மேலாக பயன்பாடின்றி இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டமானது தேசிய காசநோய் ஆராய்ச்சி ஆய்வுகூடம் மற்றும் மாவட்ட மார்பக சிகிச்சைப் பிரிவுகளிற்காக ரூபா 4.07 மில்லியன் கிரயத்தில் 10 எல்ஈடி நுண்ணோக்கிகளை கொள்வனவு செய்திருந்ததுடன் இதில் 2014 யூலை 18 இல் பெறப்பட்ட 08 நுண்ணோக்கிகள் அத்தகைய நுண்ணோக்கிகளை இயக்குவதற்கு திறமைவாய்ந்த உத்தியோகத்தர் இல்லாமையால் மார்பக சிகிச்சைப் பிரிவுகளில் 2016 மார்ச் 23 வரை பயன்பாடற்று இருந்தது.

(இ) காலி காரப்பிற்றியவிலுள்ள போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட ரீபீ கலாச்சார ஆய்வுகூடம் தேவையான ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்படாமையால் 2014 யூலை 16 இலிருந்து 2015 திசெம்பர் 31 வரை பயன்பாடற்று இருந்தது.

(ஈ) புலனாய்வு அறிக்கைகளின் பிரகாரம், நாடளாவிய ரீதியிலுள்ள 16 மார்பக சிகிச்சைப் பிரிவுகளில் களஞ்சியங்களில் ஏற்கனவே காலவதியான அல்லது குறுகிய காலத்தில் காலாவதியடையக்கூடிய காசநோய் எதிர்ப்பு மருந்துகளிருந்தன. செயற்திட்ட பணிப்பாளரின் விளக்கத்தின் பிரகாரம், தொடர்ச்சியான சிகிச்சையின் அவசியத்தன்மை காரணமாக அதற்கு தேவையான இருப்புக்களை உயர் மட்டத்தில் பேணுவதற்கு வேண்டப்பட்டிருந்தது. ஆகையால், மருந்துகளின் செல்லுபடியாகும் காலத்தின் காலாவதியை தவிர்ப்பது கஷ்டமாகவுள்ளது. எனினும், வருடாந்த கொள்வனவு கட்டளைகளை பிரித்தல் மற்றும் பிரிக்கப்பட்ட இருப்புக்களில் மருந்துக்களை பெறுதல் மூலம் நட்டத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

## 7. மனித வளங்கள் முகாமைத்துவம்

அனுமதித்த பதவியணியில் 80 ரீபீ உதவியாளர்களிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 69 அலுவலர்கள் மாத்திரமே சேவையிலிருந்தனர். செயற்திட்டத்தின் அதிகளவு உத்தியோகத்தர்கள் வேலையை விட்டு சென்றமையால் மாவட்ட கலாச்சார நிலையங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் நுண்ணோக்கியல் நிலையங்களின் செயற்பாடுகள் திருப்திகரமாக செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. தொடர்ச்சியான விலகலால் மீளாய்வாண்டின் போது செயற்திட்ட அலுவலர்கள். கணக்காளர், கொள்வனவு அலுவலர், கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு அலுவலர் போன்ற பதவிகள் வழக்கமாக வெற்றிடமாகவே இருந்தது.

## 8. நிதிக்கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

செயற்திட்டத்தின் மோட்டர் வாகனங்களுக்கான எரிபொருள் பயன்பாடு மீதான கட்டுப்பாடுகள் திருப்திகரமாக அமுலாக்கப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. எரிபொருள் சிட்டைகளின் தீர்ப்பனவில் காசை தவறாக பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் மற்றும் ஓட்ட அட்டவணைகளை மோசமாக பேணுதல் போன்றன கணக்காய்வில் ஒழுங்காக புலனாய்வு செய்யப்பட்டது.